# பகுதி IV (அ) — மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாணத்தின் மாகாண சபை
### 1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிதி நியதிச்சட்டம்
### 5 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிதி நியதிச்சட்டத்தின் 5 (1) ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் முதல் அமைச்சரும் நிதி, சட்டமும் ஒழுங்கும், பிரதேச நிருவாகம், திட்டமிடல், காணி, உள்ளூராட்சி, கல்வி விவகார அமைச்சருமாகிய வீரசூரிய திஸாநாயக்க முதியன்சேலாகே புஞ்சி பண்டா திஸாநாயக்க ஆகிய நான் இந்தக் கட்டளை மூலம் கீழ்வரும் வியாபாரத்தை 1995 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதியிலிருந்து மொத்த விற்பனவு வரியிலிருந்து விலக்களிக்கின்றேன் :—

> "தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள கூட்டுறவுச் சங்கங்கள்".

டப்ளியூ. எம். பீ. பி. திஸாநாயக்க,
மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் முதல்
அமைச்சரும் நிதி, சட்டமும் ஒழுங்கும், பிரதேச
நிருவாகம், திட்டமிடல், காணி, உள்ளூராட்சி,
கல்வி விவகார அமைச்சரும்.

04 — 406/2

---

### மத்திய மாகாணத்தின் மாகாண சபை
### 1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிதி நியதிச்சட்டம்
### 7 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிதி நியதிச்சட்டத்தின் 7 (1) ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் முதல் அமைச்சரும் நிதி, சட்டமும் ஒழுங்கும், பிரதேச நிருவாகம், திட்டமிடல், காணி, உள்ளூராட்சி, கல்வி விவகார அமைச்சருமாகிய வீரசூரிய திஸாநாயக்க முதியன்சேலாகே புஞ்சி பண்டா திஸாநாயக்க ஆகிய நான் 1990 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதியிட்ட 642/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டதான கட்டளையை 1995 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கீழ் குறிப்பிட்டவாறு திருத்தஞ் செய்கின்றேன் :-

(1) அத்தகைய கட்டளையில் (ஞ) விடயத்தின் கீழ் உள்ள சிங்கள மொழி பெயர்ப்பில் "ලී බඩු" எனும் சொல்லுக்குப் பதிலாக "ගෘහ භාණ්ඩ" எனும் சொல் பதிலீடு செய்யப்படுகின்றது. அத்துடன் தமிழ் மொழி பெயர்ப்பில் (ட) விடயத்தின் கீழ் "மரத்தளபாடங்கள்" எனும் சொல்லுக்குப் பதிலாக "தளபாடங்கள்" எனும் சொல் பதிலீடு செய்யப்படுகின்றது.

(2) அத்தகைய கட்டளையில் (ண) விடயத்தின் கீழ் "10 சத வீதம்" எனும் விசித அளவு அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக "05 சத வீதம்" எனும் விகித அளவு பதிலீடு செய்யப்படுகின்றது.

டப்ளியூ. எம். பீ. பி. திஸாநாயக்க,
மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் முதல்
அமைச்சரும் நிதி, சட்டமும், ஒழுங்கும், பிரதேச
நிருவாகம், திட்டமிடல், காணி, உள்ளூராட்சி,
கல்வி விவகார அமைச்சரும்.

04 — 405 /2